# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **டி.ஏ.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

பிராமணன் எது செய்தாலும் நியாயம், அப்ராமணன் என்ன செய்தாலும் அநீதி என்ற அடிப்படையில் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்தியாவில் பார்ப்பன ஆதிக்கம் கோலோச்சி வந்திருக்கிறது என்பது இன்றைய பகுத்தறிவுவாதிகளுடைய (?) பதட்டமான வாதம். அப்படியா? பாரத தேசத்து சாத்திரங்கள் எந்தவிதமான நடுநிலைமையும் இன்றி, ஒருதலைப்பட்சமாக ஒரு குறிப்பிட்ட சாதியினருக்கு மட்டும் கொடி பிடித்தனவா? இந்தக் கேள்விக்கு வைணவம் தக்க பதில் சொல்கிறது.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் தம் 'ஆசார்ய ஹ்ருதயம்' 86ம் சூர்ணிகையில் 'பகவத் ஸம்பந்தமான ஞானம் இல்லை என்றால் உத்தம சாதி என்றும், உத்தம ஆச்ரமம் என்றும் சொல்லப்படுவன உத்தமம் அல்ல. பரமாத்மாவை அறியாத பிராம்மணன் வேதத்தைச் சுமக்கும் பிராம்மணக் கழுதை. அவன் நாய் இறைச்சி தின்பவனைக் காட்டிலும் தாழ்ந்தவன். அவன் கல்வி செருப்பு தைப்பதற்குச் சமம். அவனுடைய பிராம்மண வேஷம் சவத்துக்குச் செய்யப்பட்ட அலங்காரம் என்கிற கருத்தைக் கூறுகிறார்.

அந்த சூர்ணிகை இப்படி வருகிறது: "அஜ்ஞர் பிரமிக்கிற வர்ணாச்ரம வித்யா வ்ருத்தங்களை கர்த்தப ஜந்மம் ச்வபசாதமம் சில்பநைபுணம் பஸ்மாஹுதி சவவிதவா அலங்காரம் என்று கழிப்பர்கள்"

அஜ்ஞர்கள் என்ற சொல் அறியாதவர்களைக் குறிக்கும். எதை அறியாதவர்கள்? "கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்" என்ற ஞானத்தை அறியாதவர்கள். ஞானத்திலே உயர்ந்த ஞானம் இளைவனுக்கு அடிமை செய்தல். பிராம்மணனுக்கு முக்கிய லக்ஷணம் அதுதான். அந்த குணம் இல்லை என்றால் அவன் பிறப்பும், அவன் ஸந்யாசியாய் இருந்தால் அந்த ஸந்யாஸ ஆச்ரமமும் அவன் கற்ற கல்வியும் பார்ப்பவர்களை பிரமிக்க வைக்குமே தவிர, அவை பயனுடையவை அல்ல என்கிறார். அதைத்தான் "பிரமிக்கிற வர்ண ஆச்ரம வித்யா வ்ருத்தங்கள்" என்ற சொற்றொடரிலே பார்க்கிறோம். இவையெல்லாம் உலகத்துப் பாமரரை வியக்க வைக்கலாம், அச்சுறுத்தலாம். ஆனால் ஞானியின் கண்ணோட்டத்தில் இவை வெறும் வெளி வேஷங்களே என்கிறார்.

அப்படிப்பட்ட பிராம்மணனை கர்த்தப ஜன்மம் என்கிறார். கழுதைப் பிறப்பு என்பது அதன் பொருள். கழுதை பொதி சுமக்கும். இவனோ வேதத்தை பொதியாகச் சுமந்து கொண்டிருக்கிறான் என்று சாடுகிறார். இந்த இடத்தில் பகுத்தறிவாளர்கள் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். முழுக்க முழுக்க பிராம்மணப் பின்னணியில் உருவாகி, பிராம்மணப் பின்னணியில் உரை எழுதப்பட்டு பிராம்மண ஆசார்ய பரம்பரையினரால் இந்த நூல் இன்று வரை பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது. பிராம்மணனைக் கழுதை என்று சொல்லும் ஒரு நூலைப் பார்ப்பன இனம் பாதுகாத்துப் பொதுமக்கள் படிக்கும்படி நம்மிடம் ஒப்படைக்க வேண்டிய காணம் என்ன? இந்து சமயம் பார்ப்பன இனத்தால் ஏற்படுத்தப்பட்டு, பார்ப்பன

ஆதிக்கத்துக்காகவே நீர் ஊற்றி வளர்க்கப்பட்ட ஆலமரமாக இருந்திருந்தால் இந்த நூலைப் பார்ப்பனர்கள் என்றோ அழித்துவிட்டிருப்பார் களே! சூத்திரர்கள் எல்லாரும் கழுதைகள் என்று சொல்லும் சாத்திரங்களை ஏற்படுத்தி யிருப்பார்களே! நான்காம் வருணத்து நம்மாழ்வாரை ஆசார்யர் என்றும் தலையாழ்வார் என்றும் ப்ரபந்ந ஜன கூடஸ்தர் என்றும் பெருமைப்படுத்தி இருக்க மாட்டார்களே! வியாசர் ஒரு பிராம்மணப் பெண்ணுக்குப் பிறந்தவர் என்று சரித்திரத்தை மாற்றி எழுத அவர்களுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்? கீதை சொன்ன கண்ணன் சுத்த பிராம்மண வம்சத்தில் பிறந்தவன் என்று புது பாகவதம் எழுத அவர்களுக்கு முடியாதா? பாரத தேசத்து மனித இனத்தையே அடக்கி ஆண்டார்கள் என்று நீங்கள் சொல்லுகிற அந்த இனம் அவ்வளவு ஆற்றல் உடையதாய் இருந்தால் இந்த தகிடுதத்தமெல்லாம் அவர்களுக்கு எம்மாத்திரம்?

அந்தச் சூர்ணிகையின் தொடர்ச்சியிலே 'ச்வபசாதமம்' என்கிற தொடர் வருகிறது. இதன் பொருள், இறைபக்தி இல்லாத சந்யாசி, நாய் இறைச்சி தின்பவனைக் காட்டிலும் தாழ்ந்தவன் என்பதாகும். இந்து மதம் போலிச் சாமியார்களின் புகலிடம் என்று ஏசுபவர்கள் இந்த இடத்தை கவனிக்க வேண்டும். உயர்வு எனபது உத்தம வைணவநிலை என்ற அடிப்படையிலேதான் தீர்மானிக்கப்பட்டது. ஜாதி, பிறப்பு, ஆச்ரமம் இவற்றைக் கண்டு இந்து மதம் ஒருக்காலும் ஏமாந்ததில்லை.

வெறும் கல்விச் சிறப்புக்கும் வைதிகர்கள் வாய்பிளந்து நிற்கவில்லை. இறையடிமை என்ற ஞானம் இல்லாத எந்தக் கல்வியும் செருப்புத் தைக்கக் கற்ற கல்விக்குச் சமம் என்று இதற்கு உரை எழுதிய மணவாள மாமுனிகள் சில்ப நைவுணம் என்ற சொல்லுக்குப் பொருள் எழுதுகிறார். அடுத்து வரும் 'பஸ்மாஹுதி' என்பதற்கு உரையாசிரியர் பகவானை த்யானம் செய்யாதவர்கள் செய்கிற கர்ம அனுஷ்டானங்கள், சாம்பலில் போடப்பட்ட ஆகுதி போன்று பயன் அற்றது என்கிறார். மேலும் இப்படிப்பட்டவர்கள் அணிந்து கொள்ளும் பூணூல், பஞ்சகச்சம், காஷாயம், திருமண்காப்பு, சிகைமுடிச்சு இவையெல்லாம் சவ விதவாலங்காரம், அதாவது இறந்துபோன சவத்துக்குச் செய்யப்படும் அலங்காரம் அல்லது கணவனை இழந்த மனைவி சுமங்கலி போல் பூ முடித்து பொட்டுவைத்து ஸகல அலங்காரங்களும் செய்து சொண்டு திரிவது போன்றது ஆகும் என்கிறார்.

ஜாதியைச் சொல்லி மேடைப்பேச்சு பேசி மூலதனமே இல்லாமல் லாபம் சம்பாதிக்கும் சமுதாயப் பகுத்தறிவுப் பேச்சாளர்கள் கொஞ்சமாவது நெஞ்சிலே சான்றாண்மை உள்ளவர்களாக இருந்தால் இதைப் படித்துப் பிறகாவது தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் இந்து மதத்தைச் சாடுவதாகக் கூறி அவர்கள் செய்யும் துஷ்ப்ரசாரங்கள் சமுதாயத்திலே முளைவிட்டுக் கொண்டிருக்கும் இளம் பிஞ்சு நெஞ்சங்களைப் பாதிக்கிறது. ஒரு தொன்மையான கலாசாரத்தைச் சீரழிக்கிறது. மனிதன் என்றால் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வரைமுறையோடு பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் வாழ்ந்து காட்டி, ''மதம்தான் வாழ்க்கை, வாழ்க்கைதான் மதம்'' என்பதைச் செயல் படுத்தி, இதுதான் எங்கள் தனித் தன்மை என்று உலகின் மற்ற நாடுகளை வியக்கவைத்த ஒரு மாபெரும் தேசத்துக்கு அவர்கள் துரோகம் இழைக்கிறார்கள். இந்த மண்ணிலே பிறந்து இதன் சாரத்தினால் வளர்ந்து இந்த நாட்டின் பெருமைகளையெல்லாம் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொண்ட இவர்கள் இனியும் திருந்தாவிட்டால் காலத்தின் தண்டனைக்கு இவர்கள் கட்டாயம் தலைகுனிந்துதான் ஆக வேண்டும்.